**Volume : 4, Issue : 1, May 2020** **Pg. No. 83 - 87**

புதிய அவையம்
காலாண்டு மின்னிதழ்
ISSN : 2456-821X

# *சூழலியல் : தமிழ்த் தலைமைத்துவத் தொடர்பாடல் தனித்துவம்*

***முனைவர் சு.சிவசந்திரகுமார்***

*உதவிப் பேராசிரியர்*
***தமிழாய்வுத்துறை,***
***தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),***
***திருப்பத்தூர்,***
***திருப்பத்தூர் மாவட்டம் – 635 601.***

===========================================================

## *முன்னுரை*

*உலகின் மக்கள் தொகை அடுத்த 50 ஆண்டுகளில் 9.5 பில்லியன் (950 கோடி) ஆகிவிடக்கூடும் என்பது ஆய்வு தரும் புள்ளி விபரம். இதனை அடிப்படையாகக் கொண்டு இயற்கைவளங்களைப் பாதுகாத்துப் பகிர்ந்தளிப்பது குறித்த விவரனைப் போக்குகள் தலைத் தூக்குகின்றன. இச்சூழலுக்குத் தலைமைத்துவம் தனித்துவப்படுகின்றது. தலைமை உள்ளூரிலிருந்து உலகிற்கு எனும் அடிப்படையில் எதிர்நோக்கப்படுகின்றது. உலக அளவில் கீழைத் தேய மரபின் இளந்தலைமுறையிடம் பேச்சாளுமைக் குறைகள் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். உலக சுகாதார நிறுவனம் (*WHO) *மாணவர்களுக்கென வகுத்துத் தந்திருக்கும் பத்து அடிப்படை வாழ்வியல் பயிற்சிகளில் பேச்சுக் கலையை வலியுறுத்துக்கின்றது. உலக அளவில் ஆசியாவில் தான் இளம்தலைமுறையிடம் கூச்ச சுபாவம் (Communication Break) அதிகம் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். சிறிய வயதிலிருந்து குழந்தைகளைக் குறுக்கே பேசாதே மறுத்துப் பேசாதே என்றெல்லாம் கண்டித்து வளர்ப்பது தான் இதற்குக் காரணம் என்பதாகக் குறிப்பிடுகின்றனர். இச்சூழலைத் தமிழ் மரபிற்குப் பொருத்திப் பார்க்கும் பொழுது இக்கூற்று பொருந்துவதாகத் தெரியவில்லை. என்பதைத் தகுந்த சான்றுகளுடன் எடுத்துச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## சூழலியலும் இலக்கியமும்

உயிரின வாழ்க்கைச் சூழலியல் என்பதையே சூழலியல் (Ecology) என்பதாகக் கொள்ளலாம். இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே உயிரோட்டமான உறவு சாத்தியமாகும் என்பதையே இப்புலம் வலியுறுத்துகின்றது. இலக்கியங்களை ரஸ்கின் இருவகையாகப் பகுத்துக் காண்பார் (சோ.ந.கந்தசாமி இலக்கியமும் இலக்கிய வகைமையும் ப.12)

அவை 1.Literature for hour 2. Literature for Ever

இவற்றுள் இரண்டாவது ஆக்க இலக்கியம் பாற்பட்டது. ஆக்க இலக்கியம் சமுதாய உணர்வு தேசிய சிந்தனை விழுமியங்கள் (Nobal Thoughts); உயர்தகவுகள் (Higher Values)ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. சூழலியலை ஆக்க இலக்கியத்தின் சார்பு மற்றும் விமர்சனப் பாங்கிற்குப் பொருத்திப் பார்க்கலாம். ஏனெனில் ஆக்க இலக்கியம்: இலக்கிய கோட்பாடொன்றினைத் தான் மேற்கொள்வதற்கான காரணங்களை விளக்கும்போது இலக்கிய கோட்பாட்டிற்கும் சமூகப் பிரச்சனைகளுக்கும் இடையே உள்ள உறவு துல்லியமாகத் தெரியவரும் என்பார் கா.சிவத்தம்பி.(கார்திகேசு சிவத்தம்பி இலக்கியமும் கருத்து நிலையும் ப.16) இவ்விடத்தில் ஆக்க இலக்கியத்தை எப்படி அடையாளம் காண்பது என்ற வினாத் தோன்றும். ஆக்க இலக்கியம் சார்புநிலையற்றது என்பதான விடை இலக்கிய திறனாய்வில் இடம்பெற்றது. இத்தகைய வரையறைகள் அல்லது விடைகள் இலக்கியத் திறனாய்வில் ஆரம்பக் காலக்கட்டம் என்றும் தற்காலத்தில் அப்படியொரு சார்பற்ற தன்மை எக்காலத்திலும் இலக்கியத்திற்கு இருந்திருக்க முடியாது என்பதுமான புதுக்குரல்கள் வலுத்து வருகின்றன. இலக்கியத்திற்குச் சார்புநிலை இல்லையென்றால் அது விஞ்ஞான பார்வையில் இருந்து விலகி மெய்ஞானப் பார்வையை அடைந்து விடுகின்றது எனவே, விஞ்ஞானப் பார்வையில் அணுகும்போது இலக்கியத்திற்கான சார்பு இருக்குமென்பதை அறிதல் வேண்டும். அதன் மூலமாக ஆக்க இலக்கியத்தின் பண்பை வரையறுக்கலாம். ஆக்க இலக்கியத்தின் குரல்கள் சார்புநிலையற்றதாகக் கோட்பாடாகச் சொல்லும் தனித்தன்மை வாய்ந்தவை. கொள்கையினை வரன்முறையான சிந்தனை நெறிக்கமைய வகுத்தமைத்துக் கொள்ளும் முறையே ‘கோட்பாடு’ என்பதாகும். ஆக்க இலக்கியத்திற்குத் தெரிவும் சார்பும் இல்லை என்பது பெறப்படும். பெண் கொலை புரிந்த நன்னன் என்ற மன்னனை அனைத்துப் புலவர்களும் ஒன்று சேர்ந்து பாட மறுத்துள்ளனர். இவ்விடத்தில் இலக்கியம் பிறகலைகளில் இருந்து தன்னை முதன்மைப் படுத்திக் கொள்கிறது அல்லது தனித்தன்மை வாய்ந்ததாக உள்ளது.

இயற்கை அகம் வளமை ஆக்கம் பெண்

செயற்கை புறம் பண்பாடு அழிவு ஆண்

ஆகியன தமிழரின் பண்பாட்டுத் தளத்தில் இணைநிலை உறவுடையவையாக இயங்கியதை ஆய்வறிஞர்கள் புரிந்து கொள்ளவில்லையென்றும் பெண் என்பவள் இயற்கை போல பிரகிருதியைப் போல உற்பத்தி ஆற்றலைப் பெற்றவள். அவளைச் சாதி சமய வட்டார வாழிடம் போன்ற சிறப்பு அடையாளங்களைக் கடந்தவளாக இலக்கியம் கருதுவதாகக் கருத்துரைப்பார் முத்தையா.(இ.முத்தையா.பழந்தமிழ்ப் பண்பாட்டு வெளிகளின் அரசியல்.ப.19) இங்கு பெண் இயற்கை சார்ந்தவள் எனும்போது அதை வலியுறுத்தும். இலக்கியம் பெண்ணின் அழிவிற்குக் குரல் கொடுப்பதைக் காணலாம். பெரும்பாலும் இயற்கையின் மீதான வன்முறைக்கு ஆக்க இலக்கியம் குரல் கொடுத்துள்ளது. அஃது ஒன்றே அதன் சார்பு என்பதும் பெறப்படுகின்றது. உலகைத் தொடக்கமாகக் கொண்டாலும் உள்ளூர் தலைமையை அடக்கமாகக் கொண்ட பாடல்கள் இவை.

## சூழலியலும் அரசியலும்

மேய்ச்சல் புல்வெளிகளில் கருவிகள் இறக்க மறுக்கும் தொதவர் தேசம்.நீலகிரியிலுள்ள தோடர் இனத்தைத் சேர்ந்த மக்கள் மேய்ச்சல் நிலங்களில் கருவிகள் கொண்டு சமன் செய்வதில்லை. மாற்றரசன் ஒருவன் தன் நிலத்தில் கழுதைகளைப் பூட்டி எருக்கம் விதைப்பதை எண்ணிப் பார்க்கத் துணியா வீரர்கள் கல்லாகி நின்றதும்,புறத்திணையின் இறுதியில் வெற்றி பெற்றவன் பகையரசரின் நிலங்களைப் பாழ்படுத்த கூடும் என்பதற்காக உயிர் துறந்த வீரர்களின் நடுகற்கள் அதிகமாகக் கிடைத்துள்ளன. காவியம் பாடும் பாவிக பண்பில் நாட்டுச் சூழலைப் பாட்டில் சேர்த்த புகழும் உள்ளூர் தலைமையை உரமாகக் கொண்டதனால் தான். தமிழ்க் காப்பியங்கள் புறச்சமயங்களான சமண,பௌத்தம் ஆதிக்கம் நிறைந்தவை.அழகியல் மறந்தவை என்றபோதும் சூழல் சார்ந்த படலங்களை,காதைகளை,இலம்பகங்களைத் தன்னுள் இணைத்துக் கொள்ள மறுக்க வில்லை. குளம் தொட்டு கோடு பதித்ததும் அதன் தொடர்ச்சியேயாகும். ஏரி, குளங்களை வெட்டியதும் புணரமைத்ததும் இக்காலக்கட்டங்களில் என்பதும் மறுப்பதற்கில்லை. விழாக்கோள் மறப்பின் தொடுத்த பாசத்து தொல் பதி நகரைப் பொருந்தாமல் காக்க விழாவரைந்தது சூழலியலின் சூத்திரங்கள் அன்றி வேறில்லை.விழாக்கள் தொடரவில்லை யென்றால் ஏற்படும் விபரீதம் பூதம் ஊரை விட்டு நீங்கும் என்பதால் நடத்தியுள்ளனர். இஃது எப்படி சூழல் தொடர்பாகும் என என்னும் ஆய்வாளர்களுக்கு மனச்சூழலியலை இக்கட்டுரை நினைவு கூர்கிறது. ஏரி,குளங்களைக் காப்பவன் கால்கள் தன் தலைக்கு மேல் என எண்ண வைத்ததும் கல்வெட்டில் இடம்பெறும் ஓம்படைக் கிளவியில் கூட சூழலியல் சிந்தனைகள் ஓங்கியிருந்தது. உயர உயர கோபுரம் அமைத்தும் அதன் கண் விதைநெல் காத்ததும் உன்னத தலைமையின் வண்ணனைக் குறிப்புக்களேயாகும். கோயில் கோபுர கலசங்களில் விதைகளைப் பாதுகாத்தது புவிப் பந்தின் மீதான காதலேயாகும் கல் நட்ட அரசுகள் எல்லாம் புல் நட துணிந்தமையும் மக்கள் ஈனச் சரக்கு எடுத்துண்ணும் வேளையில் புளி நட்டு புண்ணியம் தேடியமையும் உள்ளூர்

தலைமையின் உன்னதப் பணியே அன்றி வேறில்லை. பஞ்ச காலங்களில் புளிய மரத்தின் விதைகளை தோல் நீக்கி ஊற வைத்து உண்டனர் என்பதனால் சாலை ஓரங்களில் புளிய மரங்களை அதிகமாக்கியது அரசு. கொள்ளேற்று கோடு அஞ்சுவானை எம்மையும் புல்லியதால் காளை இனம் காத்து சூழல் காத்தமை உள்ளூர் பெண்மையின் உரத்த சான்றுகளாகும். பெண்கள் சூழலியலுக்கு ஆற்றிய தொண்டு பெருந்தொண்டு. இருக்கும் இடத்தில் இருக்கும் வளத்தை எடுத்து இல்லாதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற பகிர்தல் தத்துவத்தைப் பதினான்கு குழிகள் அமைத்து பாடம் சொல்வதும் பெண்களின் பெருவெளி தான். விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி மறந்தனம் துறந்த காழ்முளை அகையத்ததும் அத்தகையத்தே.

## சூழலியலும் சமயமும்

சமயத்தைப் பொருத்தவரைச் சூழலியலை வேறொரு கண்ணோட்டத்தில் அணுகியுள்ளது. 400 பக்கம் கொண்ட புவிவெப்பமாதல் அறிக்கையில் புவியின் வெப்பநிலை அதிகரிப்பில் தமிழகத்திற்கு தனிப் பங்குண்டு என்பது எவராலும் மறுக்கவிலாது. பஞ்ச நூற்றாண்டை அஞ்ச வைப்பதாக அந்நெருப்பு இன்றளவும் எரிந்து கொண்டுள்ளது. வள்ளலாரின் இந்நெருப்பு சமயத் தலைமைக்கான தனிச்சான்று. பசித்தீ நோய்க்கு அடுப்புத்தீ மருந்தானதும் அகத்தீ ஒன்றினைப் புறத்தீ கொண்டு அணைக்கலாம் என்ற கண்டறிதல் மட்டுமின்றி காலம் கடந்தும் செயல்படுவது தரமான தலைமைத்துவ தத்துவமேயாகும்.பிரமனின் ஆணவ மலம் ஒழிக்க தலையைக் கிள்ளியதும் இளையான்குடி மாறனின் ஆணவம் அகற்ற பாச பழி முதல் பறிப்பார் போல் பறித்ததும் வெறும் சொல்தேர்வுகள் மட்டுமன்று சூழல் காக்கும் அமைச்சனின் அமர்ந்த சொற்கள் அவை. கிள்ளுதல்,பறித்தல் முறையே சிந்திக்கத்தக்க சொற்களாகும் பக்தி சொல்லும் வேளையிலும் சூழல்சார்ந்த செய்திகள் துணை கொண்டு எழுதப்பட்டுள்ளன. சூழலியலுக்கான கொள்கைகள் வகுத்துக் காணும் சூழலில் அதற்கான செயற்பாடு வள்ளலாரின் உள்ளூர் தலைமைக்கான தகுந்த சான்றாகும். ஒலி மாசு குறித்து ஓராயிரம் கருத்தரங்குகள் நடக்கும் சூழலில் பேசாப் பொருண்மையில் காட்சிகளைக் காணுங்கள் பேச்சினை விடுத்து என்பதை எடுத்துச் சொல்லிய சமயங்களும் இங்குண்டு. ஆசீவகச் சமயத்தின் தோற்றுவிப்பாளாராக இருந்த மற்கலி பேசுவதில்லை. பேசினால் உயிர்களை வாளால் எறிந்த குற்றத்திற்கு ஆளாக நேரிடும் என்பதால் அவர் பேசுவதில்லை. இஃது எப்படி சூழல் தொடர்பாகும் என என்னும் ஆய்வாளர்களுக்கு மனச்சூழலியலை மீண்டும் இக்கட்டுரை நினைவு கூர்கிறது தாவரச் சங்கமம் என்ற ஒரு சொல்லுக்கே உயரிய விருதினைப் பெற தகுதி படைத்த சமயங்களும் உள்ளூர் தலைமையின் உன்னத சான்றுகள். புல் ,பூண்டு,புழு,மரம், பறவை, பாம்பு, கல், மனிதன், பேய், கணம் ,அசுரர், தேவர் என்ற எல்லாப் பிறப்பும் இயற்கைப் பாற்பட்டது பல்லுயிரியத் தொகுதி என்பதையே காட்டுகின்றது. உரக்கார்த்திகையும், சாணிப் பிள்ளையாரும் , முளைப்பாரியும் ,கரகக்கலையமும் நாட்டார் சமயத்தின் உள்ளூர் தலைமைக்கு

நன்னடத்தைச் சான்றுகளாகும்.நாடுகாண்களம்,காடுகாண் களம் என வகுத்து புழங்குப் பொருள் பண்பாட்டைப் போற்றிக் காணும் நாட்டுப்புறங்களும் சூழலியல் காத்த பொக்கிசங்களேயாகும்.

## நிறைவுரை

அரசு, பண்பாடு, மரபு என்றெல்லாம் மாறியிருந்தபோதும் சூழல் சார்ந்த சொல்லாடல்களில் மாற்றமில்லை. ஆள்வோர் நிர்வாகம் தனதான போது மாறிய காட்சிகள் மகத்தானவை. அவை கவிதைகளில் புலம்பலாக வெளிப்படுவதைக் காணலாம். காவிரியைக் கடக்க ஓடங்கள் தேவையில்லை. ஒட்டகங்கள் போதும் என்ற புதுக் குரல்களும் மரங்களைத் தான் வெட்டினார்கள் மலைகளையுமா என்ற எதிர்கதையாடல்களும் எங்கும் நிரம்பியிருக்க கடந்த காலங்கள் தீர்வு சொல்லவும், தற்காலங்களோ தவறு யார் மீதென்பதற்கான சொல்லரங்குகள் நாடாத்திக்கொண்டிருக்கின்றன. தலைமைத்துவங்களும்,நிருவாக விதிச் சக்கரங்களும் சரியாகச் சுற்ற வேண்டும் என்பது புவி மீது பசை இருப்போரின் பாச குறிப்புகள். இல்லாமலாப் பலகோடிப் பனை விதைகள் மண்ணில் பதியமிடப்பட்டுள்ளன. வேண்டிய அளவு விதைப் பந்துகளும் விதைக்கப்பட்டுள்ளன. படைத்து விளையாடும் இயற்கையின் விளையாட்டுக் குறிப்புகள் போகுமிடம் ஆக்கமா அழிவா என்பது அறிதற்கில்லை.

## கட்டுரைக்கு உதவியன


*1. பாரதி (பதி)., பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர் சமயமரபுகள்,புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.2011.*

*2. கோபி சந்த் நாராங்., (தமிழில் எச்.பாலசுப்பிரமணியம்) அமைப்பு மையவாதம் பின் அமைப்பியல் மற்றும் கீழைக் காவிய இயல் , சாகித்ய அகாதெமி ,2005.*

*3. சுந்தரராஜன் .பி.,சுற்றுச்சூழல் சட்டம் தேவை புதிய பார்வை ,பூவுலகின் நண்பர்கள்,2017.*

*4. தேவிபிரசாத் சட்டோபாத்யாயா., (தமிழில் வி.என்.ராகவன்) இந்தியத் தத்துவ இயல் ஓர் எளிய அறிமுகம்.,அலைகள் வெளியீடு, சென்னை,2007.*

*5. மிருணாள் காந்தி காங்கோபாத்யாயா( தமிழில் சா.ஜெயராஜ்) இந்தியாவில் மெய்யியல்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,2011.*

*6. விக்டர் லூயிஸ் அந்துவான்.எம்.,(தமிழில் அ.அந்தோணி குருசு) சூழலியல் மேலாண்மை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,2018.*

*7. விஜயலெட்சுமி . ர . தமிழகத்தில் ஆசீவகர்கள் . உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் .1998.*

*8. ஜான் பெல்லமி ஃபாஸ்டர் .,(தமிழில் மு. வசந்தகுமார்) மார்க்சும் சூழலியலும், விடியல் பதிப்பகம்,2012.*